1979 ஏப்ரல் 26]

(ஆ) 'பசு பராமரிப்பை'— மைய அரசின் கீழ் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அனிமல் ஹஸ்பெண்டரி இன்றைக்கு மாநில அரசின் அதிகாரத்தில் இருக்கிறது. அதன்கீழ் தான் பசு வதை போன்றவைகள் வருகின்றன. அதை மாநில அரசின் அதிகாரத்திலிருந்து பிரித்து மத்திய அரசினுடைய அதிகாரத்தின்கீழ் கொண்டு வரப்போவதாக அதற்கான அரசியல் சட்டத்தை திருத்த போவதாகவும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பிரதம மந்திரி அவர்கள் பேசியதாக பேப்பரில் வந்தது பார்த்தேன். இதைத் தடுக்க நீங்கள் நிச்சயமாக ஏதாவது செய்ய வேண்டும். ஒவ்வொரு அதிகாரமாக இப்படி பிடுங்கிக் கொண்டே இருந்தால் எப்படி? ஏற்கெனவே குறைந்த அதிகாரங்கள் தான் இருக்கின்றன. இப்படிப்போய் கொண்டே இருந்தால் "We will be worse than a Municipality" அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் இருப்பதையும் பறித்துக் கொள்வதை தடுக்க வேண்டும், அதற்கு இந்த அரசாங்கம் நல்ல பேர்ம் ஸ்டேண்ட் எடுக்க வேண்டும். அப்படி எடுக்காவிட்டால் It will be too late. So I would request the State Government to take up the opposition firmly to taking away this power.
மாநில அரசாங்கம் இதை தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பிரச்னை சம்பந்தமாக இன்றைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானமே இங்கே வர இருக்கிறது. அது சம்பந்தமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் காலையில் தொடர்பு கொண்டு பேசியபோது தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டவர்களைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்பதை நல்லவேளையாக நான் முன்கூட்டியே கேட்டுத்தெரிந்து கொண்டேன். அவர்கள் சொன்னது, இத்தகைய சுடை அடைப்புப் போராட்டத்தில் வழக்கமாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடுவது விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாடிக்கையாக இருக்கிறது என்ற முறையில் வன்முறை அதிகமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் தற்காப்புக் காவல் என்ற அடிப்படையில் சில பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதும் ஆனால் இப்போது ஓரளவு அமைதியான நிலைமை ஏற்பட்டு இருக்கிற காரணத்தாலும் மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பொறுப்புமிக்க திரு. ஏ. ஆர். மாரிமுத்து போன்றவர்கள் அவர்களை விடுவிக்கலாம் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிற காரணத்தாலும், அரசு இன்றைய

தினம் எங்கெங்கே வழக்குகளில் சம்பந்தப்படாமல் குறிப்பிட்ட எந்த வன்முறை சம்பவங்களிலும் சம்பந்தப்படாமல் முன் எச்சரிக்கையாக கைது செய்யப்பட்டு இருக்கிறார்களோ அந்த விவசாயிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். இப்போது பசு வதைத் தடைச் சட்டத்தை அமலாக்குவதற்காக அரசியல் சட்டத்திலேயே ஒரு மாற்றம் கொண்டு வரலாமா என்ற கருத்தை மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், அது பற்றி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் விடுத்த அறிவிப்பையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது வெறும் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள அதிகார பங்கீடு என்ற முறையில் அல்ல. இன்று ஏற்பட்டு இருக்கிற இன்னும் சொல்லப்போனால் யதார்த்தமான நிலை என்று சொல்கிற அந்தச் சூழ்நிலையில், அந்த நிலையில் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

மாநில அரசுகள் சில தேசிய முடிவுகளை தாங்களே முன் வந்து நிறைவேற்றுகிற நிலைமைகளை கடைபிடித்தார்கள் என்றால் மத்திய அரசு இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்காது. குறிப்பாக, மேற்கு வங்கமும், கேரள மாநிலமும், பசு வதை தடை சட்டம் கொண்டு வருவது அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பசு வதை கட்டாயமாக தடை செய்யப்பட்டேயாகவேண்டும் என்பதற்காக திரு. வினோபா பாவே அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் என்று தொடங்கி, உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார். நாட்டுக்காக தியாகம் செய்த மிகப் பெரிய மனிதர் அவர் என்ற காரணத்தாலே அவருடைய கருத்துக்கு மதிப்பளிக்கிற வகையில் அது பற்றியும் சிந்திக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பிரச்னையைப்பற்றி எண்ணுகிறபோது அதில் இருக்கிற நிலைமைகளைப் பற்றியும் கருதி முடிவு எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இன்று கூட மேற்கு வங்கமும், கேரளாவும் நினைத்தால் இந்த மாநில சுயாட்சி காப்பாற்றப்படுவதற்கு எல்லா வாய்ப்புகளும் உண்டு என்பதை நான் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்வதை இந்த அரசாங்கம் எப்போதும் ஏற்காது.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நேரத்தில் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முன் வரிசையில் இருப்பவர்களுக்குத்தான் வாய்ப்பு கொடுக்கப்படும். உங்களுக்கு இல்லை, உட்காருங்கள்.

[1979 ஏப்ரல் 26]

திரு. மு. அம்பிகாபதி : நான் பேசிக்கொண்டே இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிகொண்டே இருங்கள்.

(திரு. மு. அம்பிகாபதி நின்று கொண்டு இருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவில் முன் வரிசையில் இருக்கிற தலைவர்கள் தான் ஜீரோ அவரில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்போது திரு அழகர்சாமி வேண்டு மானால் கேட்கலாம். திரு. அழகர்சாமி அவையில் இல்லாமல் இருந்து இருந்தால் திரு. மு. அம்பிகாபதியை அனுமதித்து இருப்பேன். அங்கே இப்படி முடிவு எடுத்துக்கொடுத்துவிட்டு, இங்கே வந்து இப்படி நடந்துகொள்ளக்கூடாது. ஆகவே, திரு. அழகர்சாமிதான் இப்போது கேட்கவேண்டும். திரு. மு. அம்பிகா பதிக்கு அனுமதி கொடுக்க முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : கேரள அரசைப் பற்றி அமைச்சர் கூறி இருப்பதால், நான் இப்போது பேசியே தீருவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிப்பதாக இல்லை. (திரு. மு. அம்பிகாபதி நின்று கொண்டிருந்தார்) நீங்கள் நின்று கொண்டே இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அனுமதிக்க முடியாது. ஏற்கெனவே எடுத்திருக்கிற முடிவுப்படி முன்வரிசை யில இருக்கிற தலைவர்கள்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப லாம். வேண்டுமானால் அழகர்சாமி கேட்கட்டும்.

திரு. ரா. உமாநாத் : மேட்டர் என்ன என்பதை நான் சொல்லி விடுகிறேன். பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்ற முறையில் கூட அதை சொல்லலாம். அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து, மேற்குவங்க அரசும், கேரள அரசும் நினைத்தால் மாநில சுயாட்சியைப் பாதுகாக்க முடியும் என்று தெரிகிறது, அப்படி யானால் அந்த இரண்டு அரசாங்கங்களும்தான் மாநில சுயாட்சிக்கு குறுக்கே நிற்கின்றன என்ற 'இம்ப்யூட்டேஷன்' அதிலே இருக்கிறது இது ஒரு சீரியசான சார்ஜ். இதை நான் சீரியசாகவே சொல் கிறேன். மாநில சுயாட்சிக்கு போராட்டம் நடத்துவோம் என்று சொல்லுகிறவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதற்கு நீங்கள் 'காம்பைன்' நடத்துகிறவர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இந்த இரண்டு அரசுகள்தான் குறுக்கே நிற்கின்றன என்று சொல்வது தப்பு. அமைச்சர் அந்த முறையில் சொன்னதை வாபஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : நானும் என்னுடைய கருத்தைச் சொல்லி விடுகிறேன். கேரள அரசுக்கு இந்தி மொழியில் கடிதம் வந்தால் மலையாளத்தில்தான் பதில் எழுதுவோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாநில சுயாட்சிக்கு அவர்கள் குறுக்கே நிற்கிறார்கள் என்ற முறையில் பேசுவது சரியல்ல. வினோபா பாவே அவர்களை நேரடியாகவே சந்தித்து, நல்ல விளக்கங்களை எல்லாம் அளித்திருக்கிறார்கள். வினோபாஜி பெரியவர், உயர்ந்தவர் என்பதை மதிக்கிறோம். ஆனால் இந்த நாட்டிலே மனிதர்களை எல்லாம் வதை செய்து, அவர்கள் கொல்லப்பட்ட காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வில்லை இன்றைக்கு வினோபாஜி உண்ணாவிரதம் இருக்கிறார் கள். பசு மட்டும் இன்றைக்கு வதை செய்யப்படவில்லை; ஆடு வதை செய்யப்படுகிறது. மாடு வதை செய்யப்படுகிறது, கோழி வதை செய்யப்படுகிறது. அதையெல்லாம் உண்ணாவிரதம் இருந்து தடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பசுவதையை தடை செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள். அது அவர்களுடைய விருப்பம். ஆனால் மற்றவர்களை கட்டாயப்படுத்துவது முறையல்ல. ஆகவே, ஒரு அரசாங்கத்தைப்பற்றி இங்கே அமைச்சரவர்கள் இப்படிச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சனைக்குள் போகவில்லை. வினோபாஜி எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவர்; அவர் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிறார். அதை வைத்து நாம் முடிவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் நண்பர் அம்பிகாபதி அவர்கள் பேசும்போது வினோபாஜி உண்ணா விரதம் இருப்பதுபற்றி கவலையில்லை; கேரள அரசு செய்வது தான் சரி என்று சொன்னார்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் வினோபாஜி உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி கவலையில்லை, கேரள அரசைப் பற்றிச் சொன்னதற்கு கவலைப்படுகிறார்கள்; அதுதான் அவர்களுடைய போக்கு என்று கருதுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பர்சனல் எக்ஸ் பிளனேஷன் என்ற முறையில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை அனுமதிக்க முடியாது; திரு. அழகர்சாமி வேண்டுமானால் பேசட்டும்.

1979 ஏப்ரல் 26]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியல்ல. வினோபாஜி அவர்கள் தன்னுடைய கருத்தில் ஆழமாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவரை நாங்கள் மதிக்கிறோம். ஆனால் அதற்காக ஒரு மாநில சர்க்காரை குறை சொல்வது சரியல்ல. இன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு தடைச்சட்டம் கேரளத்தில் இருக்கிறது. 10 வயதுக்குக் குறைந்த கன்றுகளை, 14 வயதுக்குக் குறைந்த கன்றுகளை கொல்லக்கூடாது என்ற தடைச்சட்டம் அங்கே இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற எந்த மாநிலத்திலும் இந்தத் தடைச் சட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்த குறிப்பிட்ட பிரச்சனைக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். மற்றவைகளை அனுமதிக்க முடியாது.

திரு. ரா. உமாநாத் : சார், நான் 'ரெய்ஸ்' பண்ணுவது 'கான்ஸ்டிடியூஷனல் ஆஸ்பெக்ட்'.

(திரு. மு. அம்பிகாபதி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி, நீங்கள் உட்காருங்கள்; உங்களுடைய தலைவர் அதற்குப் பதில் சொல்வார்.

திரு. சோ. அழகர்சாமி : கேரளத்தில் இருப்பதைப்போன்ற தடைச் சட்டம் காங்கிரஸ் ஆட்சி நடக்கும் எந்த மாநிலத்திலும் இல்லை ; பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலும் இல்லை. ஆகவே, காங்கிரஸ் தலைவர் அவர்கள் சொன்னதை மறுபடியும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. கந்தசாமி — எழுந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதிலே எழுப்பக்கூடாது. (குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்களுக்கு இப்போது வாய்ப்பு தரமுடியாது. இப்படி 235 உறுப்பினர்களும் கேட்டால் என்ன செய்வது? அத்தனை பேரையும் அனுமதித்து, அவையின் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (திரு. கே. கந்தசாமி எழுந்தார்) திரு, கந்தசாமி, உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு முக்கியமான பிரச்சனையில் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு இடமில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை; அனுமதிக்க முடியாது.

[முற்பகல் 10.10]

(திரு. எம். ஏ. லத்தீப் நின்றுகொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அனுமதி கிடையாது. திரு. லத்தீப் அவர்களே, தாங்கள் தலைவர் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறீர்கள். இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து எல்லோரும் பேசிக் கொண்டிருந்தால் நேரம் வீணாகிவிடும். (குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்கள் சில நேரம் நம்மைத் தலைவர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் சில நேரம் தம்மை தொண்டர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் எப்படி இருந்தாலும் இப்போது நான் அவரை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்இந்தப் பிரச்சினையை எழுப்பி அரசு தரப்பிலேயும் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை மேலும் வளர்ப்பது கூடாது. ஒவ்வொரு கட்சியினரும் தமது கருத்துக்களை கூற ஆரம்பித்தால் நேரம் போதாது. ஆகவே நான்அனுமதிக்க முடியாது. அமர வேண்டும்.

(திரு. கே. கந்தசாமி அவர்களும், திரு. எம். ஏ. லத்தீப் அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே அனுமதித்து அனுமதித்துதான் திரு. லத்தீப் அவர்கள் கட்டாயப்படுத்தி அனுமதி கேட்கிறார். ஆகவே நான் யாரையும் அனுமதிக்கத் தயாராக இல்லை. அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நான் சொல்ல விரும்பவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்களுக்கும் நான் சொல்கிறேன். அவர்களுடைய தலைவர் பதில் சொல்லிவிட்டார். ஆகவே, கட்டுப்பாடோடு அமரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, என்னை அனுமதிக்க வேண்டும்....

[1979 ஏப்ரல 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க முடியாது. அமருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அமர முடியாது. நின்று கொண்டே இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அப்படியானால் நின்று கொண்டே இருங்கள். தலைவர் சொல்கிறபடி கேட்கவேண்டும். அனுமதிக்க இயலாது என்று கூறிவிட்டேன். ஆகவே, அமர்ந்து விடுங்கள். இல்லாவிட்டால் மேற்கொண்டு அதற்கான நடவடிக்கையை எடுக்க நேரிடும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அமர முடியாது. என்னை அனுமதிக்க வேண்டும். நான் அனுமதி கேட்டால் எல்லா உறுப்பினர்களையும் காட்டுகிறீர்களே. எனக்கு அனுமதி வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. லத்தீப் அவர்கள் உட்காரவேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நடவடிக்கை எடுங்கள். பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. லத்தீப் அவர்கள் அமருங்கள். இல்லை என்றால் விதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர் திரு. அழகர் சாமி அவர்களும், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்களும் நான் சொன்னதைத் தவறான எண்ணத்திலே புரிந்து கொண்டார்களோ என்று உண்மையிலேயே ஐயப்படுகிறேன். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் பேசியபோது நான் இங்கே எடுத்துச்சொன்னது அந்த இரு அரசுகளுக்கும் களங்கத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. அந்தப் பிரச்சினையினுடைய தன்மைகளைப்பற்றியும் அல்ல. மாண்புமிகு

திரு. உமாநாத் அவர்கள், மாநில மத்திய அரசுகளுக்குரிய அதிகாரப் பங்கீடு குறித்து இப்படி ஒரு நிலைமை ஏற்படலாமா என்பதைப்பற்றி இங்கே எழுப்பினார்கள். ஆனால், நான் என்ன சொன்னேன் என்பதைக் சொல்கிறேன். இந்தப் பிரச்சினைக்குரிய சூழ்நிலையை எடுத்துச் சொல்லி ''இந்தப் பிரச்சினையைத் தவிர்க்கின்ற வகையில் ஈடுபட்டிருந்தால் மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசு எடுக்கவேண்டிய நிலைமை இல்லாமல் போய்விடும் அல்லவா'' என்று தான் சொன்னேனே தவிர இரண்டு அரசுகளுக்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் நிச்சயமாக இல்லை.

மேலும், கேரள மாநில அரசோடு நல்லதொடர்பு நம்முடைய அரசுக்கு இருக்கின்றது. குறிப்பாக கேரள மாநில முதலமைச்சர் ரோடு தனிப்பட்ட முறையில் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. கேரள மாநில அரசைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு முடிவுக்கு வருவதற்கும் வராமல் இருப்பதற்கும் கேரள மாநில மக்களுடைய நிலைமைகளைப் பொறுத்து அவர்கள் முடிவு எடுக்க வேண்டி வருகிறது. அதேபோல மேற்கு வங்க அரசு அங்கே உள்ள நிலைமைகளின் அடிப்படையிலேதான் முடிவுகளை எடுக்க வேண்டி வருகிறது. ஆனால், அந்த அரசு எடுக்கின்ற முடிவுகள் சரியானதல்ல என்றோ அல்லது தவறு என்றோ நான் குறிப்பிடவில்லை. ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் இத்தகைய நிலைமை இருக்கின்றது ஆங்கிலத்திலே கூடச் சொல்வார்கள்,

What is the right decision is different from what is the best decision என்று சொல்வார்கள். சில நேரங்களில் முடிவுகள் சரியானதாக இருந்தாலும்கூட அப்போது இருக்கின்ற நிலைமைகளுக்கு உகந்ததாக இல்லாமல் போய்விடும். ஆகவே, சரியான முடிவுகளை எடுக்கின்ற நிலைமைகளை மாற்றி சில நேரங்களில் முடிவுகளை எடுக்கவேண்டி வரும். இந்த மன்றத்திலேகூட பல முடிவுகள் அப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், வாட் இஸ்தி பெஸ்ட் என்கின்ற அந்த அடிப்படையில் தான் குறிப்பிட்டேனே தவிர வேறல்ல. நம்முடைய மாநில அரசுக்கும் அந்த அரசுக்கும் இடையே நல்ல உறவு இருக்கின்றது; நல்ல உடன்பாடு இருக்கின்றது. அதற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படுகின்ற வகையில் நான் இதைத் தெரிவிக்கவில்லை என்பதை தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இத்தோடு இந்தப் பிரச்சினையை வீட்டுவிடுவது நல்லது. ஏனென்றால், ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு வகையான கருத்து இருக்கலாம். அதை எல்லாம் அனுமதித்தால் அதுவே பெரிய விவாதமாக ஆகிவிடக்கூடும் என்று தங்களுக்கிருக்கின்ற ஐயமும் நியாயமானதுதான். ஆகவே, இத்தோடு பிரச்சினையை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம்.. .. .. ..

திரு. எம். ஏ. லத்தீப்: எனக்கு உரிமையில்லையா?.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவருக்கு நிச்சயம் உரிமை உண்டு. இப்படி என்னை கட்டாயப்படுத்தி, குரல் எழுப்ப வேண்டாம். அப்படி நடந்துகொண்டால் அவையின் நிகழ்ச்சிகள் சுமுகமாக நடைபெற இயலாது.....

திரு. எம். ஏ லத்தீப்: எனக்குத் தெரியும்.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. எம் ஏ. லத்தீப்: முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நின்று கொண்டிருக்கிறேன். உட்காருங்கள் என்று சொல்கிறேன். உட்கார முடியாது என்று சொன்னால் இது என்ன விதி? நீங்கள் உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வதெல்லாம், இன்று 26 தேதி ஆகிறது. இன்னும் 2 நாட்களில் சபைக் கூட்டம் முடியப் போகிறது. 'பார் ஏ லாங் திரி மந்த்ஸ்' இந்த மன்றக் கூட்டம் நடந்து வந்திருக்கிறது. இந்த நேரத்தில் 'எலாஸ்டிசிடி' ஜாஸ்தி வேண்டும், அங்கத்தினர்களோடு, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்தப் பயங்கரமான வார்த்தையை 'யூஸ்' பண்ணவேண்டியதில்லை இப்போது மூன்று டி. எம். கே. உறுப்பினர்களை வெளியேற்றியபிறகு, நடவடிக்கை எடுப்பேன் என்று உங்கள் வாயில் இருந்து வெளிவருவது எந்த அளவிற்கு முறை என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து பொதுவாக வேண்டுகோள் விடுகிறேன்..... ..

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நடவடிக்கை என்று சொல்கிறது, அது 'செல்ப் ரெஸ்பெக்ட்' பிரச்னையாக இருக்கிறது. நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வதெல்லாம், இன்னும் 2 நாட்களில் இந்த மன்றக் கூட்டம் முடியப்போகிறது. இப்போதுதான் கொஞ்சம் 'எலாஸ்டிசிடி' ஜாஸ்தி இருக்க வேண்டும். மன்றத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று சொன்னால் 'வி வில் கோவாபரேட்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த ஆண்டுகளாக அப்படிபட்ட வார்த்தையை நான் உபயோகப்படுத்தவில்லை. அதே நேரத்தில் எதிர்வரிசையில் இருக்கக்கூடிய தலைவர்கள் அவையின் விதிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது. நான் அமருங்கள் என்று சொல்கிற போது, திரு. உமாநாத் அவர்கள், அவரை அமரச்செய்து, பிறகு பேசலாம் என்று சொல்லியிருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக அப்படிப்பட்ட வார்த்தையை நான் சொன்னதில்லை. ஆனால் உட்கார முடியாது, நீங்கள் நின்றாலும், நான் நின்று கொண்டே இருப்பேன் என்று முன் வரிசையில் உள்ள தலைவர்கள் சொல்கிற போது, விதிகளுக்கு அப்பாற்பட்டு நடப்பேன் என்று சொல்கிற போது, திரு. உமாநாத் அவர்கள் அவரை உட்கார வைத்திருந் தால், அது நியாயமாக இருந்திருக்கும். நான் அனுமதிக்க வில்லை என்று சொன்னபிறகு, இப்படி ஒரு எதிர்க்கட்சியின் தலைவர்கள் சொல்வார்களானால், நிச்சயமாக நான் உமாநாத் அவர்களைக் கேட்கிறேன் — 'உங்கள் அனுபவத்தை வைத்துச் சொல்லுங்கள், அப்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அதை விட்டுவிட்டு நாங்கள் இப்படித்தான் வற்புறுத்து வோம் என்று சில தலைவர்கள் சொல்வார்களானால், அப்போது என்ன கட்டுப்பாடு இருக்கிறது? இப்படி அவர்கள் பேசினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? எப்படி அவையின் நிகழ்ச்சிகளை சுமூகமாக நடத்த முடியும்? உட்காருங்கள் என்று சொன்னால், சிரித்த முகத்துடன் உட்கார்ந்து விட்டு, மறுபடியும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டால் பரவாயில்லை. நான் என்ன சொன்னாலும், என் அனுமதி இல்லாமல், பேசித்தான் தீருவேன், உட்கார மாட்டேன் என்று சொன்னால்—நான் திரு. லத்தீப் அவர்களைச் சொல்லவில்லை, மொத்தத்தில் சொல்கிறேன். நீங்கள் அதைப்பற்றி தவறாக நினைத்துக்கொண்டு அதற்காகப் பேசவேண்டாம். நான் மொத்தத்தில் சொல்கிறேன்— எதிர் வரிசையில் இருக்கும் தலைவர்கள் விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். எனக்கு இந்த அவையின் மரபைக் காப்பாற்ற வேண்டும், விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகே காவல் துறையினர் நடத்திய தாக்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகே 23—4—1979 அன்று போலீசார் நடத்திய தாக்குதல் குறித்துப் பேரவையில் விவாதிக்க பேரவையின்